# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1838/57 - 2013 නොවැම්බර් මස 29 වැනි සිකුරාදා - 2013.11.29

1838/57 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

**1964 ஆம் இண்டின் 28 ஆம் இலக்க ,காணி சுவீகரிப்பு (மறுசீரமைக்கப்பட்ட) சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்டவாறான காணி சுவீகரிப்புச் சட்டம் (460 ஆம் அத்தியாயம்)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

குறியீட்டு இலக்கம் . : எம்ரிஆர்/எல்என்டி/ ஏஸீகிவ்யுஐ/எல்02/3930.

பொது மக்கள் தேவைநிமித்தம் அவசியப்படும் கீழ் குறிப்பிடப்படும் காணியை/ஆட்சி உரிமையை அரசு கையேற்கத் தீர்மானித்துள்ளதாக, 1964 ஆம் ஆணடின் 28 ஆம் இலக்க, காணி சுவீகரிப்பு (மறுசீமைக்கப்பட்ட) சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்டவாறான காணி சுவீகரிப்புச் சட்டத்தின் (460 அத்தியாயம்) 7ஆம் பிரிவின் (1)ஆம் உப பிரிவின் கீழ், இத்தால் அறியத்தருகின்றேன்.

சுவீகரிப்புக்கான உத்தேச காணி பற்றிய விபரங்கள்:

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், மாத்தறைப் பிரதேச செயலாளர் பிரிவில், கடேவீதிய கிழக்கு கிராம அலுவலர் பிரிவில், நூபே கடேவீதிய கிராமத்தில் அமைந்துள்ள வரைபட இலக்கம் மு.பி.மாறை 2569 இல். துண்டு இலக்கம் 01,02 எனக் குறிப்பிடப்பட்ட மண்ணஹெகெவத்த காணி, அநகாரிக தர்மபால மாவத்தை விஸ்தரிப்பிற்காக, அரசு கையேற்றுள்ளது.

**அட்டவணை**

**1.துண்டு இலக்கம் 01**

காணியின்பெயர்: மண்ணஹெகெவத்த; பரப்பளவு: 0.0002 ஹெக்டயார்; தற்போதைய காணிப் பாவனை: நடைபாதை ; உரிமைகோருவோர் : இல 130 A , அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறையில் வதியும் எஸ்.எப்.வஸீனா.

2. துண்டு இலக்கம் 02.

காணியின்பெயர்: மண்ணஹெகெவத்த; பரப்பளவு: 0.0001 ஹெக்டயார்; தற்போதைய காணிப் பாவனை: நடைபாதை: உரிமைகோருவோர்: இல. 130 அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறையில் வதியும் எம்.ஏ.எம்.கஸ்ஸாலி.

மேற்குறிப்பிட்ட காணிக்கு/ஆட்சி உரிமை உரிமைகள், அல்லது வேறு வழிகளிலான தொடர்புள்ள அனைவரும் அவரவர்கள் அல்லது அவரவர்களின் எழுத்து மூல அதிகாரம் வழங்கப்பட்டவர்கள் அனைவரும் 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி முற்பகல் 10.30 மணிக்கு மாத்தறைப் பிரதேச செயலகத்தில் என்முன்பாக சமுகமளிக்க வேண்டும்.

இன்னும், 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதிக்கு முன்னர் அந்தக் காணி சம்பந்மான அவர்களின் உரிமைகள் மீதான தன்மை பற்றியும், அந்தக் காணி சுவீகரிக்கப்படுவதனால் நஷ்டஈடு கோருவதற்கான காரணங்கள் பற்றியும் அந்த நஷ்டஈட்டுத் தொகையும், அது கணக்கீடு செய்யப்பட்ட விதம் பற்றியும் எனக்கு இரண்டு பிரதிகள் சகிதம் எழுத்து மூல ஆவணங்கள் வாயிலாக அறிவிக்கப்படல் வேண்டும்.

வை.விக்ரமசிறி,
பிரதேச செயலாளர்(வே.பா)
மாத்தறை.

பிரதேச செயலகம்,
மாத்தறை,
2013, நவெம்பர் 27.

12-615

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**1964 ஆம் இண்டின் 28 ஆம் இலக்க, காணி சுவீகரிப்பு (மறுசீரமைக்கப்பட்ட) சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்டவாறான காணி சுவீகரிப்புச் சட்டம் (460 ஆம் அத்தியாயம்)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

குறியீட்டு இலக்கம் . : எம்ரிஆர்/எல்என்டி/ ஏஸீகிவ்யுஜ/எல்02/3845ஈஎக்ஸ்.

பொது மக்கள் தேவைநிமித்தம் அவசியப்படும் கீழ் குறிப்பிடப்படும் காணியை/ஆட்சி உரிமையை அரசு கையேற்கத் தீர்மாளித்துள்ளதாக, 1964 ஆம் ஆணடின் 28 ஆம் இலக்க, காணி சுவீகரிப்பு (மறுசீமைக்கப்பட்ட) சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்டவாறான காணி சுவீகரிப்புச் சட்டத்தின் (460 அத்தியாயம்) 7ஆம் பிரிவின் (1)ஆம் உப பிரிவின் கீழ், இத்தால் அறியத்தருகின்றேன்.

சுவீகரிப்புக்கான உத்தேச காணி பற்றிய விபரங்கள்:

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், மாத்தறைப் பிரதேச செயலாளர் பிரிவில், கடேவீதிய மேற்கு கிராம அலுவலர் பிரிவில், நூபே கடேவீதிய கிராமத்தில் அமைந்துள்ள வரைபட இலக்கம் மு.பி.மாறை 2568 இல். துண்டு இலக்கம் 01, 02 எனக் குறிப்பிடப்பட்ட காணிகள், அநகாரிக தர்மபால மாவத்தை பாதை விஸ்தரிப்பிற்காக, மேலதிக காணிப்பகுதியொன்றாக சுவீகரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை**

**1.துண்டு இலக்கம் 01**

காணியின்பெயர்: .....;பரப்பளவு: 0.0014 ஹெக்டயார்; தற்போதைய காணிப் பாவனை: நடைபாதை; உரிமைகோருவோர் : இலக்கம் 292/3, அநகாரிக தர்மபால மாவத்தை, நூபே, மாத்தறையில் வதியும் ரி.டி.கே,தர்மபால, இலக்கம் 292/1, அநகாரிக தர்மபால மாவத்தை, நூபே, மாத்தறையில் வதியும் டீ.பீ.பீ.எம்.குலவர்தண. இல.292/1A, அநகாரிக தர்மபால மாவத்தை, நூபே, மாத்தறையில் வதியும் சுமனா அபேகுணரத்ன உடன் இலக்கம் 1/28,வேரகம்பிட்ட பன்சலை வீதியில், மாத்தறையில்,வதியும் டைடஸ் ரணசிங்க விக்ரமனாயக்க.

**02. துண்டு இலக்கம் 02.**

காணியின் பெயர்:...; பரப்பளவு: 0.0013 ஹெக்டயார்; காணி மீதான தற்போதைய பாவனை: நடை பாதை; உரிமைகோருவோர்: இல 188/1, அநகாரிக தர்மபால மாவத்தை, நூபே, மாத்தறையில் வதியும் அருண கஜதீர றப்துல் றக்டான் மொஹமட் ஜவ்ஹாரி.

மேற்குறிப்பிட்ட காணிக்கு/ஆட்சி உரிமைக்கு அல்லது வேறு வழிகளிலான தொடர்புள்ள அனைவரும் தத்தமது அல்லது அவரவர்களின் எழுத்துமூல அதிகாரங்கள் வழங்கப்பட்டவர்கள் அனைவரும் 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு மாத்தறைப் பிரதேச செயலகத்தில் என்முன்பாக சமுகமளிக்க வேண்டும்.

இன்னும், 2013 ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னர் அந்தக் காணிகள் மீதான அவர்களின் உரிமைகள் சம்பந்தமாக, அந்தக் காணிகள் மீதான அதிகாரங்களைக் கையேற்பதனால், நஷ்டஈடு கோருவதற்கான காரணங்கள் பற்றியும் அந்த நஷ்டஈட்டு கணக்கீடு செய்யப்பட்ட விதம் பற்றியும் எனக்கு இரண்டு பிரதிகள் சகிதம் தயாரிக்கப்பட்ட எழுத்து மூல ஆவணங்களினால் அறிவிக்கப்படல் வேண்டும்.

வை.விக்ரமசிறி,
பிரதேச செயலாளர்(வே.பா)
மாத்தறை.

பிரதேச செயலகம்,
மாத்தறை,
2013, நவெம்பர் 27.

12-616

---

**1964 ஆம் இண்டின் 28 ஆம் இலக்க, காணி சுவீகரிப்பு (மறுசீரமைக்கப்பட்ட) சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்டவாறான காணி சுவீகரிப்புச் சட்டம் (460 ஆம் அத்தியாயம்)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

குறியீட்டு இலக்கம் . : எம்ரிஆர்/எல்என்டி/ ஏஸீகிவ்யுஜ/எல்02/3911.

பொது மக்கள் தேவை நிமித்தம் அவசியப்படும் கீழ் குறிப்பிடப்படும் காணியை, அரசு கையேற்கத் தீர்மானித்துள்ளதாக, 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, காணி சுவீகரிப்பு (மறுசீரமைப்பு) சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்டவாறான காணி சுவீகரிப்புச் சட்டம் (460 ஆம் அத்தியாயம்) 7ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ், இத்தால் அறியத்தருகின்றேன்.

கையேற்கப்படவுள்ள உத்தேச காணியின்/காணி மீதான அதிகாரங்களுக்கான விபரங்கள்:-

தென் மாகாணத்தில். மாத்தறை மாவட்டத்தில், மாத்தறைப் பிரதேச செயலகப் பிரிவில், நுடாவ கிழக்கு கிராமசேவையாளர் பிரிவில், துடாவ கிராமத்தில் அமைந்துள்ள, மு.பி.மாறை 2510 வரைபடத்தில் துண்டு இலக்கம் 01,02,03 எனக்குறிப்பிடப்பட்ட கால்லகெவத்த,கொஸ்கஹகும்புற காணிகள், மாத்தறை-ஹக்மன பாதையில் 2/2 வடிகாலின் மூலம் நீர் வடிந்து செல்வதற்கான வடிகால் நிர்மாணிப்பிற்காக சுவீகரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை**

**01 துண்டு இலக்கம் 01**

காணியின் பெயர் :கால்லகெவத்த; பரப்பளவு: 0.0019 ஹெக்டயார்; காணி மீதான தற்போதைய பாவனை:சேற்று நிலம் ; உரிமை கோருவோர் :அரசு;

02 துண்டு இலக்கம் 02

காணியின் பெயர்: கொஸ்கஹ கும்புற; பரப்பளவு: 0.0101 ஹெக்டயார்; காணி மீதான தற்போதைய பாவனை:சேற்று நிலம்; உரிமை கோருவோர்: துடாவ மஹானாம ஸமரவீர மாவத்தையில் இலக்கம் N/92 இல் வதியும் அருண கஜதீர.

03 துண்டு இலக்கம் 03

காணியின் பெயர் :கொஸ்கஹ கும்புற; பரப்பளவு: 0.0017 ஹெக்டயார்; காணி மீதான தற்போதைய பாவனை:சேற்று நிலம்; உரிமை கோருவோர்: துடாவ கஸ்யட்டவத்த, கொஸ்கஹகும்புறயில் வதியும் அபேரத்ன சிறிவர்தன ரேஜினா.

மேற் குறிப்பிட்ட காணிக்கு/காணி மீதான அதிகாரங்களுக்கான உரிமைகள் அல்லது வேறு வகையிலானதொடர்புகள் உள்ள அனைவரும், தத்தமது அல்லது அவரவர்களின் எழுத்து மூல அதிகாரங்கள் வழங்கப்பட்டவர்கள் அனைவரும் 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆம் திகதி, மு.ப.10.30 மணிக்கு மாத்தறை பிரதேச செயலாளர் காரியாலயத்தில் என்முன்பாக சமுகமளிக்க வேண்டும்.

இன்னும், 2013 திசெம்பர் மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னர், அந்தக் காணி/காணிகள் மீதான அவர்களின் உரிமைகள் சம்பந்தமாக, அந்தக் காணியை/அந்தக் காணி மீதான அதிகாரங்களைக் கையேற்பதனால், நஷ்டஈடு கோருவதற்கான காரணங்கள் பற்றியும், அந்த நஷ்டஈடு கணக்கீடு செய்யப்பட்ட விதம் பற்றியும் எனக்கு, இரண்டு பிரதிகள் சகிதம் தயாரிக்கப்பட்ட எழுத்து மூல ஆவணங்களினால் அறிவிக்கப்படல் வேண்டும்.

வை. விக்ரமசிறி,
பிரதேச செயலாளர்(வே.பா)
மாத்தறை.

பிரதேச செயலகம்,
மாத்தறை,
2013, நவெம்பர் 27.

12-617

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.